திரு. பி. எஸ். மணியன் : தலைவர் அவர்களே, குறிப்பிட்டுள்ள குலசேகரன் கோட்டை என்ற இடத்தில் பண்டையக்காலச் சிறப்பு மிக்க ஒரு கோட்டை புதையுண்டு இருப்பதாக அந்த வட்டாரத்து மக்கள் கூறுகிறார்கள். புதைபொருள் ஆராய்ச்சித் துறை மூலமாக இதை ஆராய்ச்சி செய்ய அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இதுவரையில் அதுபற்றிய குறிப்புகள் அரசாங்கத்திற்கோ, புதைபொருள் ஆராய்ச்சித் துறைக்கோ வரவில்லை. புதைப்பொருள் ஆராய்ச்சித்துறையினர் முறைப்படி பல்வேறு இடங்களை ஆராய்ந்து வருகிறார்கள். இதற்கு முக்கியத்துவம் தருகிறார்களா என்பது ஆராய்ச்சித் துறையினரைச் சார்ந்த விஷயம். அவர்களுடைய கவனத்திற்கு வேண்டுமானால் அரசாங்கம் இதைக் கொண்டு வரலாம்.

கல்விராயன்மலையிலுள்ள பள்ளி

***402 வினா.—திரு. ந. நாச்சியப்பன் :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கராபுரம் தொகுதியில் உள்ள கல்விராயன்மலையில் இருந்த ஓராசிரியர் பள்ளி 1967-க்கு முன்பே மூடப்பட்டது என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதை மீண்டும் திறப்பதற்கு அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) கல்விராயன்மலையில் பள்ளியில் சேரவேண்டிய பிள்ளைகள் போதுமான அளவு இருந்து, புதிய பள்ளிகள் திறக்கத் தேவையான விண்ணப்பங்கள் சம்பந்தப்பட்ட நிர்வாகத்தினரிடமிருந்து பள்ளிக்கல்வி இயக்குநருக்கோ அல்லது அரசுக்கோ வந்தால் அவை பரிசீலிக்கப்படும்.

மாவட்ட வளர்ச்சி மன்றத் தலைவர்

***403 வினா.—திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாவட்ட வளர்ச்சி மன்றங்களுக்கு வளர்ச்சி மன்ற உறுப்பினர்களில் ஒருவரைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

திரு. சு. துரைசாமி : தலைவர் அவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவர் வளர்ச்சிக் குழுவின் தலைவராக இருப்பதன் காரணமாக, கூட்டங்களிலே எதாவது விளக்கம் கேட்டால் சிறு விளக்கம்தான் கொடுக்கப்படுகிறதே தவிர செய்ய வேண்டிய வேலைகளைப் பரிசீலனை